1979 மார்ச் 31]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: 1977-78 ஆம் ஆண்டு முடிய மொத்தம் 49 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு தறிஇல்லாத நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்ட கால முடிவுக்குள் இந்த 49 சங்கங்கள் உள்ளிட்டு 200 சங்கங்களை தறி இல்லாத நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியில் அமைக்க அரசு முயற்சித்து வருகிறது.

கைத்தறித்துணி விற்பனைக்குச் சலுகை.

*வினா எண் 579— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் கைத்தறித் துணிகளுக்கும் தனிப்பட்ட கைத்தறி வியாபாரிகளுக்கும் "ரிபேட்" சலுகைகளை அளித்திட அரசு ஆலோசித்து வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: தனியார் வியாபாரிகளுக்கு ரிபேட் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லுகிறார்கள். தனிப்பட்ட வியாபாரிகள் கைத்தறி துணியை வாங்கி ஏற்றுமதி செய்கிறார்கள். அவ்வாறு ஏற்றுமதி செய்யக்கூடியவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா? ஒரு ஆண்டிலே எந்த அளவிற்குக் கொடுக்கப்படுகிறது?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, கைத்தறித் துறையிலே தள்ளுபடி என்பது கூட்டுறவுத் துறையிலே உற்பத்தி செய்யப்படுகிற ரகங்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது. தனியார் துறையிலே உற்பத்தி செய்யப்படுகிற கைத்தறி துணிகளுக்கு அரசு எந்தவிதமான தள்ளுபடியும் கொடுப்பதில்லை. ஏற்றுமதி செய்கிறவர்களுக்கு ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். 1972 ஆம் ஆண்டிலே ஊக்க போனஸ் கொடுப்ப

தாக ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டு 3 சதவீதம் கொடுத்த தாகவும் அது பிறகு நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் நாங்கள் அறிகிறோம். அந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று தனியார் துறையைச் சேர்ந்தவர்கள் கேட்டு இருக்கிறார்கள். அதை மீண்டும் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, கைத்தறிக்கு ரிபேட் கொடுப்பது அதிகமாக அது விற்பனையாகவேண்டுமென்பதற்காகத்தான். கைத்தறித் துணியை உற்பத்தி செய்கிறவர்கள் தனியார்களாக இருந்தாலும், கூட்டுறவுத்துறையாக இருந்தாலும் அதிகமாக விற்பனை செய்ய வேண்டுமென்பதுதான் தேவை. நடந்த பொருட்காட்சியிலே கூட்டுறவுத் துறை உற்பத்தியாளர்களுக்குத்தான் ஸ்டால் அங்கே கொடுக்கப்பட்டது, தனியார் துறையைச் சேர்ந்த கைத்தறி துணி உற்பத்தியாளர்களுக்கு ஸ்டால் கொடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறை இருக்கிறது. இனிமேலாவது இப்படிப்பட்ட குறைபாடுகள் இல்லாமல் விசேஷ கவனம் செலுத்தப்படுமா?

மாண்புமிகு திருமதி. சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, தள்ளுபடி கொடுக்கவில்லை என்ற ஒரு குறைபாட்டை இங்கே குறிப்பிட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் தள்ளுபடி கொடுப்பதுதான் குறை என்று நாங்கள் கருதுகிறோம். சரக்குகள் அதிகமாக தேங்கினால் அப்போது அவர்களுக்கு வேலை பாதிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும், அதைத் தடுப்பதற்காகத்தான் தள்ளுபடியை அறிவிக்கிறோம். இன்றைய நிலையில் தள்ளுபடி தேவையில்லை என்று அரசு உணர்கிறது. தனியார் துறையிலே சரக்குகள் தேங்குவதில்லை. அவர்கள் விற்பனை செய்ய முழு முயற்சி எடுத்துக்கொண்டு விற்பனை செய்திருக்கிறார்கள். எனவே அங்கே துணி தேக்கம் ஏற்படுவது இல்லை. கூட்டுறவுத் துறையிலே உள்ள நெசவாளர்கள் உற்பத்தி செய்கிற துணி தேங்குகிறபோது அவ்வப்போது 20 சதவீதம் தள்ளுபடி அளிக்கப்படுகிறது. அப்படி விற்பனை செய்தால்தான் தேக்கம் குறைந்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கமுடியும். ஆனால் துணி தேக்கம் இல்லாத நேரத்திலே தொடர்ந்து அவர்களுக்கு வேலை கிடைக்கிற நேரத்திலே தள்ளுபடி தேவையில்லை என்றுதான் அரசு கருதுகிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியை ஒருவேளை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். நான் கேட்டது

1979 மார்ச் 31]

ரிபேட் பற்றியல்ல. பொருட்காட்சியிலே தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், கூட்டுறவுத் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் ஸ்டால்கள் கொடுக்கப் படவேண்டும். ஆனால் தனியார் துறையைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படாமல், ஸ்டால்கள் போட காலி இடங்கள் இருந்தும் அவர்களுக்கு அனுமதிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட குறைபாட்டை—நான் ஏற்கனவே இதுபற்றி திரு ராதாவிடம் கூடச் சொன்னேன்—ஆகவே அமைச்சர் அவர்கள் விசேஷ கவனம் செலுத்தி, விளம்பரத்தைப் பொறுத்தவரையிலே இரண்டு பேர்களுக்கும் கொடுப்பதற்கு எதிர்காலத்திலே நடவடிக்கை எடுப்பார்களா?

<u>மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:</u> தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நடந்த பொருட்காட்சிபற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார் என்று கருதுகிறேன். இந்த ஆண்டு நடைபெறுகிற பொருட்காட்சி கூட்டுறவுக் கைத்தறி வார விழா என்ற முறையிலே தான் நடத்தப்படுகிறது. ஆகவே அதிலே தனியார் துறைக்கு இடம் அளிக்க இயலாது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மற்றப் பிரச்சினைகளைப்பற்றியெல்லாம் இன்றைக்கு வர இருக்கிற அந்த மானியத்திலே பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

<u>வேலூர் சர்க்கரை ஆலை.</u>

*வினா எண். 580— <u>திரு. ரா. மார்க்கபந்து</u> : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வேலூர் சர்க்கரை ஆலையில் கரும்பு சப்ளை செய்ய ஒப்பந்தம் செய்த விவசாயிகளுக்கு கடன் தருவதாக ஒப்பந்தம் பெற்றும் பல மாதங்களாக கடனும் உரமும் தரப்படாமல் இருக்கின்றது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அரசாங்கம் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்போகின்றது ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:</u>

(அ) இல்லை. பொதுவாக விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுவதில் காலதாமதமேற்படுவதில்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.